**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்**

**முன்னிலை–திருமதி. P. தீபா, B.A.B.L.L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், மாதவரம்**

**2026–ம் ஆண்டு மே மாதம் 26–ம் நாள் செவ்வாய்கிழமை**

**CC.No.48/2021**

மாநில அரசு உதவி ஆய்வாளர் மூலமாக
எம்3 புழல் காவல் நிலையம்
குற்ற எண்.2717/2020 .......குற்றமுறையீட்டாளர்/வாதி

// எதிர் //

சுகுமார் (எ) சூரியா, வயது.27,
த/பெ.மோகன்,
எண்.329, அண்ணா குறுக்கு தெரு,
திருவள்ளூர் நகர்,
அயனாவரம், சென்னை. ............எதிரி

**CASE SUMMARY**

| Sl.No | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | 22.09.2020 – 05.11.2020 |
| II. | Date of filling of Final Report in court | 22.01.2021 |
| III. | Date of questioning of accused under section 313(1) (a) of Cr.p.c | 13.09.2021 |
| IV | Filling of Miscellaneous petitions and their result | Nil |
| V. | Date of examination in Chief and cross examination of witnesses | PW1– 20.11.2025<br>PW2– 20.11.2025<br>PW3 – 20.11.2025<br>PW 4 – 21.01.2026<br>PW 5 – 01.04.2026 |
| VI. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | 20.04.2026 |
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay buy superior court and the result thereof | Nil |

இவ்வழக்கானது 22.01.2021–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இறுதியாக 26.05.2026–ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர்

DEEPA P Digitally signed by DEEPA P

நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.தமிழ் அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

இவ்வழக்கில் கடந்த 09.09.2020–ம் தேதி அதிகாலை சுமார் 02.00 மணியளவில் எதிரி தனது TN03B2395 பதிவு எண் கொண்ட ஆட்டோவில் வந்து சாட்சி–1யின் வீட்டின் உள்ளே நுழைந்து வீட்டில் இருந்த 49 அடி Haier Led Tv–யை எதிரி தன்னிச்சையாகவும், தன் சுயலாபத்திற்காகவும் திருடி சென்று எதிரி காரணமாக இருந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது சட்டப்பிரிவு 380 இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எம்3 புழல் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரியிடம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், எதிரி மீது இதச பிரிவு 380 கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் பற்றி வினவ எதிரி குற்றத்தை பொய் என மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**5. <u>அரசு தரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>**

**அ)** அ.சா.1 மணிகண்டன் தனது சாட்சியத்தில், தான் புத்தகரத்தில் வசித்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்ததுதான் என்றும், அ.சா.1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது என்றும், கடந்த 08.09.2020 அன்று தன் வீட்டிலிருந்த Haier LED TV 49 இன்ச் டீவி காணாமல் போய்விட்டது என்றும், அருகில் இருந்த புது வீட்டில் நாங்கள் படுத்திருந்தோம் என்றும், காலை வந்து பார்த்த போது டீவியை காணவில்லை என்றும், அக்கம்பக்கத்தில் விசாரித்து பின்னர் இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், பின்னர் 22.09.2020 அன்று போலீசார் காவல் நிலையம் அழைத்து அங்கு சென்று பார்த்த போது ஒரு நபரை கைது செய்து வைத்திருந்தார்கள் என்றும், அவர்தான் டீவியை திருடியதாக கூறினார்கள் என்றும், டீவியை தான் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரணைச் செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**ஆ)** அ.சா.2 அசோக்குமார் தனது சாட்சியத்தில், தான் கொளத்தூரில் வசித்து வருகிறேன் என்றும், அ.சா.1 தனது அண்ணன் என்றும், 09.09.2020 காலை புதுவீட்டில் இருந்த டீவியை காணவில்லை என்றும், பழைய வீட்டில் இருந்து வந்து பார்த்த போது காணவில்லை என்றும், காவல் நிலையத்தில் தனது அண்ணன் புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணைச் செய்தார்கள் என்றும், 22.09.2020 அன்று காவல் நிலையத்தில் அழைத்து டீவி கிடைத்துவிட்டதாக கூறினார்கள் என்றும், அண்ணனும் அ.சா.3 ம் காவல் நிலையம் சென்றார்கள் என்றும், காவல்

DEEPA P Digitally signed by DEEPA P

நிலையத்தில் சுகுமார் என்பவர் திருடியதாக கூறியதாக கூறினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**இ)** அ.சா.3 சுரேஷ்குமார் தனது சாட்சியத்தில், தான் புத்தகரத்தில் குடியிருந்து வருகிறேன் என்றும், அ.சா.1 தனது உறவினர் ஆவார் என்றும், அவரது வீடு தனது வீட்டில் இருந்து 3வது வீடு என்றும், 2019ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், வீட்டில் இருந்த டீவி காணாமல் போய்விட்டதாக கூறினார் என்றும், காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தோம் என்றும், 15 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் அழைத்து டீவி கிடைத்துவிட்டதாக கூறினார்கள் என்றும், டீவியையும் திருடிய ஆளையும் காவல் நிலையத்தில் காட்டினார்கள் என்றும், அ.சா.1 டீவியை அடையாளம் காட்டினார் என்றும், போலீசார் தன்னை விசாரணைச் செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**ஈ)** அ.சா.4 ஏம்நாத் தனது சாட்சியத்தில், தான் சூரப்பேட் பகுதியில் வசித்து வருவதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாம் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேலும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாம் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி கையொப்பங்கள் முறையே அ.த.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடுச் செய்து, ஆஜர் எதிரியை தான் பார்த்தது இல்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து, எதற்கு கையொப்பம் செய்தேன் என்று தெரியவில்லை என்று பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

**உ)** அ.சா.5 சம்பத், உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் தற்போது வி7 நொளம்பூர் காவல் நிலையம் குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், தான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன் என்றும், கடந்த 12.09.2020 ம் தேதி காலை 8 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்த போது திரு. மணிகன்டன் என்பவர் அளித்த புகாரினைப் பெற்று சமுதாய பதிவேடு எண். 644/2020 வழங்கி விசாரித்து 22.09.2020 அன்று காலை 8 மணிக்கு எம்3 புழல் காவல் நிலைய குற்ற எண். 2717/2020, சட்டப்பிரிவு 380 இதச ஆக வழக்குப்பதிவுச் செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.2 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன், அசோக்குமார், சுரேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்து, பின்னர் சாட்சிகள் ரமேஷ், துரைபாபு என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா. 3, 4 ஆக குறியீடுச் செய்து, பின்னர் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி சுகுமார் என்பவரை கதிர்வேடு மேம்பாலம் அருகே காலை 11 மணிக்கு கைது செய்து அவர் தன்னிச்சையாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஹேம்நாத், விமல்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவுச் செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.5 ஆக குறியீடுச் செய்து, அதனடிப்படையில் இவ்வழக்கின் சொத்தான கைப்பற்றுதல் மகஜரில் அதே சாட்சிகள் முன்பு எதிரியின் வீட்டில் இருந்து கைப்பற்றினேன் என்றும், பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு

DEEPA P Digitally signed by DEEPA P

உட்படுத்தி வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.5 அரசு தரப்பு சாட்சிகள் எதிரிக்கு எதிராக பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவ எதிரிகள் அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தார். எதிரிகள் தரப்பில் சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** <u>**தீர்வுக்குரிய பிரச்சனை**</u>

**இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாவன எதிரியானவர் சட்டப்பிரிவு 380 இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

இவ்வழக்கில் கடந்த 09.09.2020–ம் தேதி அதிகாலை சுமார் 02.00 மணியளவில் எதிரி தனது TN03B2395 பதிவு எண் கொண்ட ஆட்டோவில் வந்து சாட்சி–1யின் வீட்டின் உள்ளே நுழைந்து வீட்டில் இருந்த 49 அடி Haier Led Tv–யை எதிரி தன்னிச்சையாகவும், தன் சுயலாபத்திற்காகவும் திருடி சென்று எதிரி காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளார். எனவே, எதிரி மீது சட்டப்பிரிவு 380 இதச பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

**9)** எதிரி தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்ற சம்பவத்தை பொறுத்து தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

**10)** அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப.சா.8 சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டபோதும், அரசு தரப்பில் அ.சா.1 ஆக புகார்தாரர் சாட்சியும், அ.சா.2, அ.சா.3 ஆக கண்ணுற்ற சாட்சிகளும், அ.சா.4 ஆக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியும், அ.சா.5 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டன.

**11)** அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.1 புகார்தாரர் தன்னுடைய சாட்சியத்தில் " கடந்த 08.09.2020 அன்று தன் வீட்டிலிருந்த Haier LED TV 49 இன்ச் டீவி காணாமல் போய்விட்டது என்றும், அருகில் இருந்த புது வீட்டில்

DEEPA P Digitally signed by DEEPA P

நாங்கள் படுத்திருந்தோம் என்றும், காலை வந்து பார்த்த போது டீவியை காணவில்லைபின்னர் 22.09.2020 அன்று போலீசார் காவல் நிலையம் அழைத்து அங்கு சென்று பார்த்த போது ஒரு நபரை கைது செய்து வைத்திருந்தார்கள் என்றும், அவர்தான் டீவியை திருடியதாக கூறினார்கள் என்றும், டீவியை தான் பார்க்கவில்லை " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " 3 நாட்கள் காலதாமதமாக தான் புகார் அறித்தோம் என்றால் ஆமாம் என்றும், போலீசார் கூறியதன் பேரில் தான் எதிரி தெரியும் என்றால் ஆமாம் என்றும், நான் நேரடியாக எதிரியை பார்க்கவில்லை என்றால் ஆமாம் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2, அ.சா.3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர். அ.சா.2 தனது சாட்சியத்தில் " 09.09.2020 காலை புதுவீட்டில் இருந்த டீவியை காணவில்லை என்றும், பழைய வீட்டில் இருந்து வந்து பார்த்த போது காணவில்லை என்றும், காவல் நிலையத்தில் தனது அண்ணன் புகார் அளித்தார் " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " சந்தேகத்தின் பேரில் தான் எனது அண்ணன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் ஆமாம் என்றும், எதிரி திருடியதாக காவல் நிலையத்தில் கூறியதால் தான் தெரியும் என்றால் ஆமாம் என்றும், நேரடியாக தெரியாது என்றால் ஆமாம் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில் " வீட்டில் இருந்த டீவி காணாமல் போய்விட்டதாக கூறினார் என்றும், காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தோம் என்றும்டீவியையும் திருடிய ஆளையும் காவல் நிலையத்தில் காட்டினார்கள் " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " டீவி காணாமல் போன வீட்டிற்கு கதவுக் கிடையாது என்றாலும் திறந்து தான் இருக்கும் என்றால் சரிதான் என்றும், டீவியை அந்த தெருவில் உள்ளவர்கள் எடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் ஆமாம் என்றும், சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** அரசு தரப்பில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்ப்பட்ட அ.சா.4 தனது சாட்சியத்தில் " ஒப்புதல் வாக்குமூலத்தில் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாம் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி கையொப்பங்கள் முறையே அ.த.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடுச் செய்து, ஆஜர் எதிரியை தான் பார்த்தது இல்லை " என்று என்று பிறழ் சாட்சியாக மாறி அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2,3,4 சாட்சிகள் சம்பவத்தை பொறுத்து கண்ணுற்ற சாட்சிகள் என்பதிலிருந்து விலகி சம்பவயிட சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளனர். எனவே அ.சா.2,3,4 சாட்சிகள் நேரில் பார்த்த சாட்சிகள் அல்ல.

DEEPA P

Digitally signed by DEEPA P

**15)** அரசு தரப்பில் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்ட புலன்விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில் புலன்விசாரணை அதிகாரி அ.சா.1 யிடம் புகாரினை பெற்று சம்பவயிடம் சென்று சாட்சிகளை புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்து அ.சா.ஆ.3 பார்வை மகஜர், அ.சா.ஆ.4 ஆக மாதிரி வரைபடம் தயார் செய்ததினை ஆவணமாக குறியீடு செய்து, சம்பவத்தை பொறுத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பொறுத்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளா்ர. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில் எதிரிக்கு ஆதரவாக எந்த பதிலும் பெறப்படவில்லை.

**16)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரியை பார்த்ததாக அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. புகார்தாரரும் தனது புகாரில் தனது வீட்டில் திருடுபோய்விட்டதாகவும், யார் திருடினார்கள் என்று குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை. மாறாக புகார்தாரர் தனது வீட்டில் திருடுபோன பொருட்கள் கிடைத்துவிட்டதாக போலீசார் காவல் நிலையம் அழைத்து அடையாளம் காட்டியபோதும் எதிரியை பார்தததாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.2 சம்பவத்தை பொறுத்து நேரடியாக தெரியாது என்றே அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் எதிரியை பொறுத்தும், சான்று பொருட்களை பொருத்தும் அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சி தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், ஆனால் எதிரியை தான் பார்த்ததில்லை எனவும், தனக்கு முன்னால் போலீசார் பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை எனவும், அரசு தரப்பிற்கு எதிராக முரண்பட்டே சாட்சியம் அளித்துள்ளனர்.

**17)** இவ்வழக்கில் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை அரசுதரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காதது அரசுதரப்பு வழக்கை பாதிப்பதாகவே உள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 அவரது சாட்சியத்தில் வழக்கினை விசாரணை செய்து எதிரியை கைது செய்தது குறித்தும், ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியது குறித்தும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி ஒப்புதல் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படாததாலும், அ.சா.5–ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிதான் குற்றம் புரிந்திருப்பார் என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்குகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

DEEPA P
Digitally signed by DEEPA P

**18)** எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 380 இதச பிரிவின் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே எதிரி மேற்படி பிரிவுவின் கீழான குற்றத்தில் குற்றவாளி என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை குற்றவாளிக்கு அளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக**

i) எதிரிக்கு எதிரான இதச சட்டப்பிரிவு 380 இதச கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கின் வழக்கு சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை.

Iii) இந்த வழக்கில் மேல் முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைப்பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் மே மாதம் 26–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

DEEPA P Digitally signed by DEEPA P

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | திரு.மணிகண்டன் |
| அ.சா.2 | திரு.அசாக்குமார் |
| அ.சா.3 | திரு.சுரேஷ்குமார் |
| அ.சா.4 | திரு.ஏம்நாத் |
| அ.சா.5 | திரு.சம்பத், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.09.2020 | புகார் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 22.09.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 22.09.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 22.09.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 22.09.2020 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்குச் சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை.

DEEPA P Digitally signed by DEEPA P

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**